**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

**Mcop 357/2024**

**ம.சா1 கண்ணம்மாள்**

| | |
|---|---|
| Name | :கண்ணம்மாள் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 18.06.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் மனுதாரர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. 10.09.2024 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1

2. 18.09.2024 ம் தேதியிட்ட டி.என்.76.AE3171 என்ற ஆனிமி வேனின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2.

3. 24.09.2024 ம் தேதியிட்ட TN76Q7357 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3

4. 17.09.2024 ம் தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4

5. 10.09.2024 ம் தேதியிட்ட லேப் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5

6. ரூ.2,46,023/-க்கான மருத்துவ பில்கள் எண்ணம் 18 அசல் ம.சா.ஆ 6

7. என்னுடைய Referral slip ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 7

8. என்னுடைய விபத்து பதிவேடு ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 8

9. ரூ.12,202/-க்குரிய வாகனம் பழுது பார்த்தற்குரிய பில் அசல் ம.சா.ஆ 9

10. ரூ.63,800/–க்கான மருத்துவ பில் எண்ணம் 1 அசல் ம.சா,.ஆ 10

மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் வேலை, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4 ம் எதிர்மனுதாரர் என் கணவர். இந்த வழக்கில் குற்ற வழக்கின் பார்வைமகசர், வரைபடம், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் என் கணவர் கிழக்கில் இருந்து மேற்காக சாலையை கவனக்குறைவாக கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அவர் கவனமாக தான் சென்றார். என் கணவர் கொடுத்த புகாரின் பேரில் தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ சாலை பிரதான சாலை என்றால் சரிதான். நாங்கள் சென்றது மேற்கே இருந்து கிழக்கே பார்த்து என்றால் சரிதான். பார்வைமகசர், வரைபடத்தில் சம்பவம் ரோட்டில் நடந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவரால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதால் என் கணவர் ஒட்டிசென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் அதிகமான இழப்பீடு பெற வேண்டி பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தாரின் செல்வாக்கின் பேரில் என் கணவரால் ஏற்படுத்தப்பட்ட விபத்தை மறைத்து 1 ம் எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்தியதாக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.